# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 09 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் : ..........................................................

### பகுதி - I

✧ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. "வான்குருவியின் கூடு வல்லரக்கு" என்பதில் அரக்கு என்பது
1) கறையான் 2) குருவி 3) மெழுகு 4) சிலந்திவலை

02. "உத்வேகத்தை அதனிடம் கடிபட்டபோது உணரமுடிந்தது" இதில் உத்வேகம் என்பது
1) ஊக்கம் 2) கோபம் 3) வலிமை 4) விஷம்

03. "செயற்கைச் சாதனங்கள் பயனுள்ளவை" என்பதில் செயற்கை என்பதன் எதிர்ப்பதம்
1) நவீனம் 2) இயற்கை 3) இறக்கை 4) கருவிகள்

04. "மனப்பாடஞ் செய்வது கடினமானது." இதில் கடினம் என்பதன் எதிர்ப்பதம்
1) அரிது 2) அழகு 3) இடர் 4) இலகு

05. பசு மேய்ப்பவன் ஆயன் போல குதிரை செலுத்துபவன்
1) இடையன் 2) பாகன் 3) வலவன் 4) மீகாமன்

06. மாவிற்கு வடு போல வாழைக்கு
1) நுங்கு 2) மூசு 3) குரும்பை 4) கச்சல்

07. கோதுமைக்கு மணி போல கடுகிற்கு
1) மணி 2) விதை 3) கொட்டை 4) முத்து

08. பின்வருவனவற்றுள் முக்காற்புள்ளி எனப்படுவது
1) ; 2) , 3) . 4) :

09. அறுபதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
1) மணிவிழா 2) முத்து விழா 3) மாணிக்க விழா 4) வச்சிர விழா

10. இடம், பொன், செல்வம் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
1) மாடு 2) மதி 3) நகை 4) அடி

11. ஒரு நூலாசிரியர் தனது நூலைப் பற்றி வழங்கும் உரை
1) அணிந்துரை 2) முன்னுரை 3) பதவுரை 4) விதப்புரை

12. பின்வருவனவற்றில் காலம் இடமாதலுக்கு உதாரணமாக அமைவது
1) மரத்தின் கண்கிளி 2) விரலின் கண் மோதிரம்
3) கோடை 4) நாளின் கண் மணித்தியாலம்

kalvi.lk

13. பின்வருவனவற்றில் பெயர்த்தொடராக அமைவது
1) பறவை 2) அழகான 3) ஓடினான் 4) விரைவாக

14. மல்லிகைப்பூ கமகம என மணம் வீசியது. என்பதில் கமகம என்பது
1) அடுக்குத்தொடர் 2) இரட்டைக்கிளவி
3) இணைமொழி 4) அடுக்கிடுக்குத் தொடர்

15. "பாதபங்கயம்" என்பதிலுள்ள அணி யாது?
1) உவமை 2) தற்குறிப்பேற்றம் 3) உருவகம் 4) சிலேடை

16. பின்வருவனவற்றில் வியங்கோள் விகுதி அல்லாதது
1) க 2) இய 3) அல் 4) அட்டும்

17. பெரிய மரம் வேரோடு சாய்ந்தது என்பதிலுள்ள பெயரடை
1) மரம் 2) வேரோடு 3) சாய்ந்தது 4) பெரிய

18. குமார் வேகமாக ஓடினான்
அவனால் முதற்பரிசைப் பெறமுடியவில்லை. இவ்விரு வாக்கியங்களையும் இணைப்பதற்குப் பொருத்தமான இடைச்சொல்
1) எனினும் 2) ஆகவே 3) ஏனெனில் 4) அன்றில்

19. பின்வருவனவற்றில் செயப்படுபொருள் குன்றாத வினை
1) அழுதான் 2) எழுதினான் 3) எழுந்தான் 4) சிரித்தான்

20. பின்வருவனவற்றுள் பிறவினையாக அமைவது
1) எடுத்தான் 2) கற்றான் 3) ஊட்டினான் 4) கண்டான்

21. "பச்சைக்கிளி வேகமாகப் பறந்தது" என்பதில் வந்துள்ள வினையடை
1) வேகமாக 2) கிளி 3) பச்சை 4) பறந்தது

22. சமநிலை வாக்கியத் தொடர்களால் அமைந்த வாக்கியம்
1) தனிவாக்கியம் 2) கூட்டுவாக்கியம்
3) செப்பு வாக்கியம் 4) கலப்பு வாக்கியம்

23. பின்வருவனவற்றில் செயற்பாட்டுவினை வாக்கியமாக அமைவது எது?
1) யானை பாகனைக் கொன்றது 2) பாகனே யானையைக் கொன்றான்
3) பாகன் யானையால் கொல்லப்பட்டான் 4) யானையும் பாகனைக் கொன்றது

24. பின்வருவனவற்றில் கூட்டுப்பெயர் அல்லாதது
1) சுடுகலன் 2) எறிகணை 3) வானவில் 4) மாணவர்கள்

25. பின்வருவனவற்றுள் தற்கிழமையாக அமைவது
1) நாவலரது வரவு 2) எனது வீடு
3) கண்ணனது புத்தகம் 4) கமலன் பிறந்ததினம்


kalvi.lk

✣ புள்ளிக்கோடிட்ட இடத்தினை நிரப்பப் பொருத்தமான விடையைத் தெரிக.

26. ...................... என்பவரே வல்லிக்கண்ணன் எனும் புனைபெயரால் அழைக்கப்பட்டார்.
1) டொமினிக்ஜீவா 2) கிருஸ்ணசாமி 3) கல்யாணசுந்தரம் 4) எடிசன்

27. செம்பட்டுச் சல்லடம் உடுத்து............. சிரித்து வந்தாள்
1) உமை 2) இறைவி 3) உஷை 4) கண்ணகி

28. ................... என்பது மொழியீற்றுப் போலியாகும்
1) அகம் 2) சுகம் 3) இதயம் 4) அறன்

29. எழுத்துப் பிழையற்ற வாக்கியமாக அமைவது
1) வேட்பாளர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்
2) வேட்பாளர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டனர்
3) வேட்பாலர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டனர்
4) வேட்பாளர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டதுகள்

30. பின்வரும் வாக்கியங்களைக் கருத்தமைவுள்ள பந்தியாக்குவதற்கான ஒழுங்குமுறை
அ) மருமகன் இந்த மாமனார் வீட்டுக்கு அடிக்கடி வந்து போவார்
ஆ) ஏதாவது பறித்துக்கொண்டுதான் போவார்
இ) மூத்த மகளை அயலூரிலே திருமணம் செய்து வைத்தார்
ஈ) போகும் போதெல்லாம் சும்மா போகமாட்டார்

1) அ, ஆ, இ, ஈ 2) அ, இ, ஆ, ஈ 3) இ, அ, ஈ, ஆ 4) இ, ஆ, அ, ஈ

(30 x 1 = 30 புள்ளிகள்)

## பகுதி - II

✣ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 150 சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைக.
1) இயற்கையை நேசிப்போம்.
2) புத்தகங்களே நல்ல நண்பர்கள்
3) நீரின்றி அமையாது உலகு
4) தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படும் பாதகங்கள்

(18 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 75 சொற்களில் அமையுமாறு எழுதுக.
1) விடுதியிற் தங்கிப் படிக்கும் உமது நண்பருக்குப் போதைப்பொருளின் தீங்கினை விளக்கி ஒரு கடிதம் வரைக.
2) உமது பாடசாலையில் நடைபெறவுள்ள பரிசில்நாள் விழாவுக்கான அழைப்பிதழ் ஒன்றை வடிவமைக்குக.

(12 புள்ளிகள்)

03. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்குக் கூறப்பட்டுள்ளன என எழுதுக.
1) "நாம் பார்க்கிற கண் கொண்டு பார்த்தால் உலகிலுள்ள அனைத்துமே அழகுதான்"
2) "அங்கு ஒரு தாயும் மகளும் இருப்பார்கள் அவ்விருவரையும் அழைத்து வா"
3) "யாருக்கு வெற்றி உனக்கா, பூச்சிக்கா?"
4) "உட்காருங்க, வாழைப்பழம் இப்ப வந்திடும் சாப்பிடலாம்"
5) "இந்த மல்லிகை மொட்டுக்களைப் பறித்து அழகான இரு மாலைகள் தொடுத்து வை"

(5 x 2 = 10 புள்ளிகள்)


kalvi.lk

04. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

“காய்மாண்ட தெங்கின் பழம் விழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனி சிதறி வாழைப்பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால் திசைபோய துண்டே”

1) பாடலில் இடம்பெறும் முக்கனிகளும் எவை?
2) இப்பாடலில் எந்த நாட்டின் வளம் பாடப்பட்டது?
3) தீந்தேன் சொரிந்த பூ எது?
4) வருக்கை, இசை எனும் அரும்பதங்களின் பொருளை எழுதுக.

(10 புள்ளிகள்)

05. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) இருமைக்கும் இன்பந்தருவது எது?
2) “இருட்டுக் குறைவான வெளிச்சம்” எனக் கூறியவர் யார்?
3) ஏழைகளின் நிலைமை யாருக்குத் தெரியும் எனக் கல்யாணசுந்தரம் கூறுகிறார்?
4) நிகண்டை மனப்பாடஞ் செய்தவர்கள் பிற்காலத்தில் எவ்வாறு விளங்கினர்
5) “பணிவுடையன் இன்சொலன்....” என்ற குறட்பாவினைப் பூரணப்படுத்தி அதன் பொருளையும் எழுதுக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

06. பின்வரும் சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.

1) வைகறை
2) இன்சொல்
3) சுனை
4) விறல்
5) குளுகுளு

(5 x 2 = 10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**